# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2015/2 - 2017 අප්‍රේල් මස 17 වැනි සඳුදා - 2017.04.17

2015/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2014/WS/192.
எனது குறிப்பு இல.: WAR/LAN/ACQUS/A2/5-49.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், வரக்காபொல பிரதேச செயலாளர் பிரிவில் பெலிகல் கோரளை சிறு பிரிவில், 82ஏ துல்ஹிரிய கிராம அலுவலர் பிரிவில், துல்ஹிரிய கிராமத்தில் அமைந்துள்ள, கேகாலை நில அளவையாளர் நாயகத்தினால் 2017.03.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கேஈ 3528 இல் துண்டு இல. 1 வரை விபரிக்கப்பட்டுள்ள 0.1736 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் வருமாறு:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: ஓவிடேவத்த; விபரம்: காடு; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஏ. ஏ. எம். பீ. அமரசிங்க, எச்செல்ல, நயிவல, 1/60; விஸ்தீரணம்: 0.1736 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, வரக்காப்பொல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்முன்பாக தோன்றும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

லக்ஸ்மேந்ர தமயந்தகுமார தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
வரக்காப்பொல.

பிரதேச செயலகம்,
வரக்காப்பொல,
2017, ஏப்பிறல் 06.

5 - 08

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/13/3/16.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/ 108D.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2014.12.05 ஆந் திகதிய, 1891/37 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பூ. பூ. வ. 20 குறைநிரப்பி இலக்கம் 98 பத்திரம் 163 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 4447 இனது விஸ்தீரணம் 0.1123 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது 0.1103 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ஆர். பீ. என். பீ. கருணாதிலக்க,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல.

2017, மாச்சு 30.

5 - 09

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.